# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2270/33 - 2022 මාර්තු මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.03.10

2270/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/35.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/10/2015/LRB/196.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் கொஹுவளை, பெப்பிலியான மாவத்தை 2 ஆம் ஒழுங்கை, இல. 15/25 எனும் இடத்திலிருந்து பொரலஸ்கமுவை, பெப்பிலியான, ரணசிங்ஹ மாவத்தை, இல. 327/2 எனும் இலக்கமுடைய வீட்டை அண்டியதாக அமைந்துள்ள தெபாஎல வாய்க்கால் வரையிலான வாய்க்காலை அபிவிருத்தி செய்வதற்கும், வாய்க்காலின் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பராமரிப்பு வீதியை அமைப்பதற்கும் தேவையான காணித் துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535 - பெப்பிலியான மேற்கு கிராம அலுவலர் பிரிவில், கெஸ்பேவை நகர சபை எல்லைக்குட்பட்ட பெப்பிலியான கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.07.23 ஆந் திகதிய கை: 9741 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 தொடக்கம் துண்டு இல. 6 வரை காட்டப்பட்ட கீழ் விபரிக்கப் பட்ட காணித் துண்டுகள்

1. துண்டு இல. 1

காணியின் பெயர்: தெரியாது; விபரம்: கால்வாய்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0083 ஹெக்டயார்.



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2. துண்டு இல. 2**

காணியின் பெயர்: மாதங்கஹ ஓவிட்ட; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திரு. எம். திசாநாயக்க, இல. 87, பெப்பிலியான, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம்: 0.0087 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 3**

காணியின் பெயர்: சுனேத்திரா தேவி வீதி, இரண்டாம் ஒழுங்கை, வரி மதிப்பீட்டு இல. 15/19 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலை யான கட்டிடமொன்றின் பகுதியும், தற்காலிகக் கட்டிடமொன்றின் பகுதியும், மலசலகூடக் குழி யொன்றும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திரு. டப். ஜினதாச, இல. 15/19, இரண்டாம் ஒழுங்கை, பெப்பிலியான, நுகேகொடை; விஸ்தீரணம்: 0.0047 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 4**

காணியின் பெயர்: தெஹிவளை வீதியில் வரி மதிப்பீட்டு இல. 107/1 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத் தோட்டம், நிலையான கட்டிடமொன்றின் பகுதியும், மலசலகூடமொன்றின் பகுதியொன்றும் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திரு. ஜீ. சமரநாயக்க, இல. 107/1, தெஹிவளை வீதி, பெப்பிலியான, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம்: 0.0083 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 5**

காணியின் பெயர்: தெரியாது; விபரம்: சீமெந்து வடிகால்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0004 ஹெக்டயார்.

**6. துண்டு இல. 6**

காணியின் பெயர்: பெப்பிலியான வீதியில் வரி மதிப்பீட்டு இல. 87 ஐ உடைய காணி; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: திரு. எம். திசாநாயக்க, இல. 87, பெப்பிலியான, பொரலஸ்கமுவை; விஸ்தீரணம்: 0.0040 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக் குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர் களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்,
கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவு.

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு
மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டம்
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய,
2022, மாச்சு 08.

EOG 3 - 0813